# வெள்ளத் தடுப்பு பணிகள் ! முதல்வர் வலியுறுத்தல் ... முதல் பக்கத் தொடர்ச்சி

செயல்படும் வகையில், ஒருங்கிணைப்பு மையத்துடன் தற்போது செயல்பட்டு வருகிறது.

பெய்த மழையின் அளவு எவ்வளவு? என்பதை அது பெய்கின்ற நேரத்தில் தெரிந்தால் தான், அணைகளில் நீர் திறப்பு மேலாண்மை, வெள்ள முன்னெச்சரிக்கை தகவல்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளைச் சரியாகச் செய்ய முடியும். அதற்காக, நாம் தற்போது 1400 தானியங்கி மழைமானிகளையும், 100 தானியங்கி வானிலை மையங்களையும் நிறுவி நிகழ்நேர தகவல்களைப் பெற்று வருகிறோம்.

இந்தத் தகவல்கள் பொதுமக்களுக்கும் அவ்வப்போது கிடைத்தால் அவர்கள் தங்களுக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை திட்டமிட வசதியாக இருக்கும் என்பதால்தான் ஒரு முக்கியமான செயலியை உருவாக்கி இருக்கிறோம்.

**வானிலை நிலவரங்களுக்கு தமிழிலேயே செயலி!**

**வானிலை முன்னெச்சரிக்கை, தற்போதைய வானிலை, பெறப்பட்ட மழை அளவு, நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு உள்ளிட்ட விபரங்களை தமிழிலேயே அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு அரசு TN-Alert என்னும் கைப்பேசி செயலியை உருவாக்கியுள்ளது.**

மழைக்காலத்தில் அதிகம் பாதிக்கப்படுவது மீனவ தோழர்கள் தான். ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு புயல், கனமழை குறித்த தகவல்களை நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலமாக உரியநேரத்தில் கொண்டு சேர்க்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சென்னை உள்ளிட்ட மாநகரங்கள் இந்தக் காலக்கட்டத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இயங்க வேண்டும்.

நாட்டிற்கு முன்னுதாரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு, வார்டு, தெருவாரியான வெள்ள அபாய எச்சரிக்கை வழங்க சென்னை நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதியோர், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்குத் தேவையான உதவிகளை வழங்க முன்கூட்டியே திட்டமிட்டு மாவட்ட நிர்வாகம் செயல்படுவது மிக மிக அவசியமாகிறது.

**ஓர் உயிரிழப்பும் ஏற்படக் கூடாது!**

வெள்ளப் பேரிடர்கள் ஏற்படும் பொழுது தாழ்வான பகுதிகளிலிருந்து முன் கூட்டியே வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வது மிக முக்கியம். இந்தப் பணிகளை தமிழ்நாடு அரசின் அனைத்து களப் பணியாளர்களும், பொதுமக்களுடன் இணைந்து அவர்களுக்கு அறிவுறுத்தி வெள்ளத்திற்கு முன்னரே நிவாரண மையங்களுக்கு அழைத்துச் செல்லவேண்டும். அவர்களுக்குத் தேவையான தூய்மையான குடிநீர், கழிவறை, தடையற்ற மின்சாரம் உரிய நேரத்தில் உணவு ஆகியவற்றை வழங்க வேண்டும்.

வெள்ளம் ஏற்பட்ட உடன் அரசு இயந்திரம் எவ்வளவு விரைவாக செயல்பட வேண்டுமோ அவ்வளவு விரைவாகச் செயல்பட வேண்டும். ஓர் உயிரிழப்பு கூட ஏற்படக்கூடாது என்ற நோக்கத்துடன் செயல்பட வேண்டும். அதற்குத் தேவையான நீர் இறைக்கும் இயந்திரம், மர அறுப்பான்கள், JCB, படகுகள் போன்ற கருவிகளை தாழ்வான பகுதிகளுக்கு அருகில் முன்கூட்டியே சென்று நிறுத்த வேண்டும்.

பல்வேறு வெள்ளத் தடுப்பு பணிகளை, வடகிழக்கு பருவமழை துவங்கும் முன்னரே விரைந்து முடிக்க வேண்டும். மாவட்டத்தைப் பற்றி முழுமையாக அறிந்த மூத்த அலுவலர்களை கண்காணிப்பு அலுவலர்களாக நியமித்திருக்கிறோம். அவர்கள் மழைக்கு முன்னதாகவே தங்களது பணிகளை தொடங்கியாக வேண்டும்.

**பணிகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்!**

பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் அந்தந்த பகுதிகளில் ஆயத்தப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறதா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும். வெள்ளத் தடுப்பு பணிகளை மட்டுமல்ல, ஆண்டு தோறும் நாம் மேற்கொள்கின்ற தூர்வாரும் பணிகள், பாலங்கள், சிறுபாலங்களில் கழிவுகளை அகற்றுதல், நீர்நிலைகளின் கரைகளை வலுப்படுத்துதல், அறுந்து விழக்கூடிய நிலையில் உள்ள மின் கம்பிகளை சரிசெய்தல் உள்ளிட்ட பணிகளும் சரியாக நடைபெற்று வருகிறதா? என்பதையும் ஆய்வின் போது கண்டறிய வேண்டும்.

வெள்ளக் காலம் என்றாலே மாணவர்கள் ஆர்வத்தால் ஏரி, குளங்கள் போன்ற நீர்நிலைகளுக்குச் சென்று விளையாடுவதால், உயிரிழப்புகள் ஏற்படுகிறது. இதனை தடுப்பதற்கு, பெற்றோர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளம், புயல் போன்ற பேரிடர்களில் தகவல் தொடர்பு, மின்சார வசதி போன்ற அத்தியாவசிய சேவைகளை முடிந்த வரை தடையின்றி வழங்கப்பட வேண்டும்.

பாதுகாப்பான குடிநீர், பால், உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

வெள்ளத்தினால் நோய்த் தொற்று ஏதும் ஏற்படாமல் இருக்க உரிய பொது சுகாதார சேவை மற்றும் மருத்துவச் சேவைகளை வழங்க வேண்டும்.

அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றினால் மட்டுமே இதனை உறுதி செய்ய முடியும்.

**தன்னார்வலர்களுடன் இணைந்து பணியாற்றுவீர்!**

பேரிடர் மேலாண்மையில், தன்னார்வலர்களது பங்கும் மிகவும் அவசியமானதாகும். எனவே தேடல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தன்னார்வலர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கென முறையான செயல் திட்டத்தினை மாவட்ட நிர்வாகம் உருவாக்க வேண்டும். எந்த ஒரு சவாலாக இருந்தாலும், அதில் ஈடுபடும் அனைவரும் ஒருமித்த கருத்தோடு ஓரணியாக நின்று செயல்பட்டால், அதில் வெற்றி என்பது 100 விழுக்காடு சாத்தியம்.

பருவமழையினால் ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு பொதுமக்களின் துயர் துடைக்க அரசு நிர்வாகம் மொத்தமும் ஓரணியாக நின்று செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

97வது பிறந்த நாள்! அடையாறு - தேஷ்முக் சாலையில் உள்ள மணிமண்டபத்தில்

# நடிகர் திலகம் சிவாஜி கணேசன் திருவுருவச் சிலைக்கு மரியாதை !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவிக்கிறார்!

*சென்னை, அக். 1-*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 97வது பிறந்த நாளை முன்னிட்டு, இன்று (1.10.2024) காலை 10.00 மணியளவில், சென்னை அடையார், தேஷ்முக் சாலையில் அமைந்துள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்த நாளை முன்னிட்டு, அரிய புகைப்படத் தொகுப்புகளுடன் கூடிய புகைப்படக் கண்காட்சியும் இம்மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசன் அவர்கள் 1.10.1928 ஆம் ஆண்டு பிறந்தார். "நடிப்பு தனது மூச்சு என்றும், நடிப்பு ஒன்றுதான் தனக்குத் தெரிந்த தொழில், நடிப்புதான் எனக்குத் தெய்வம்" என சிவாஜி கணேசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். குழந்தைப் பருவம் முதற்கொண்டே நடிப்பதில் ஆர்வம் கொண்டு பல்வேறு நாடகங்களில் பங்கேற்று நடித்து வந்தார். பேரறிஞர் அண்ணா அவர்களால் எழுதப்பட்ட "சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்" என்கிற நாடகத்தில் சிவாஜியாக நடித்தார். அவரின் நடிப்புத் திறமையினை பாராட்டி தந்தை பெரியார் அவர்கள் "சிவாஜி கணேசன்" என்று பெயர் சூட்டினார்.

சிவாஜி கணேசன் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கதை வசனத்தில் உருவாகிய பராசக்தி திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி தமிழ் திரைப்பட உலகில் 300க்கு மேற்பட்ட திரைப்படங் கள், 2 இந்தி படங்கள், 9 தெலுங்கு திரைப்படங்கள் மற்றும் ஒரு மலையாளத் திரைப்படத்திலும் நடித்து பிரபலமானார்.

சிவாஜி கணேசன் அவர்கள் "நடிகர் திலகம்", "நடிப்புச் சக்கரவர்த்தி" என்றும் மக்களாலும், திரை உலகத்தினராலும் அழைக்கப்பட்டார். இவர் நடித்த பராசக்தி, மனோகரா, வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், இராஜராஜ சோழன், கர்ணன் உள்ளிட்ட பல வரலாற்று சிறப்புமிக்க திரைப்படங்கள் காண்போரின் மனதில் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட அற்புத கலைஞன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நடிப்பு திறமையை பாராட்டி பத்ம ஸ்ரீ விருது, பத்ம பூஷன் விருது, செவாலியே விருது மற்றும் தாதா சாகிப் பால்கே விருது உள்ளிட்ட பல விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிலை திறப்பு விழாவில், "நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் என்னுடைய அருமைத் தோழர்! ஆருயிர் நண்பர், என்றும் தமிழாக வாழக்கூடியவர், தமிழ் உரைநடையாக வாழக்கூடியவர், என்றும் கதாபாத்திரத்திற்கு உயிரூட்டக்கூடியவர், என்றும் என்னுடன் கலந்துவிட்டவர் சிவாஜி கணேசன் அவர்கள்! அவர் சிலையைத் திறந்து வைப்பதில் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்" என்று புகழ்ந்துரைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நடிப்பின் இமயமாய், தமிழர்களின் கம்பீரமான கலையுலக அடையாளமாய் என்றென்றும் உயர்ந்து நிற்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் புகழ், தரணியும் தமிழும் உள்ளவரை என்றென்றும் நிலைத்திருக்கும் என்று பாராட்டியுள்ளார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 97 வது பிறந்த நாள் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

---

<u>இந்தியாவிலேயே</u>

# வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிக சதவீதம் உள்ள மாநிலம் தமிழ்நாடு!

## திருச்சியில் அருண் நேரு எம்.பி. பேச்சு!

*திருச்சி அக். 1-*

இந்தியாவிலேயே வேலைக்கு செல்லும் பெண்கள் அதிக சதவிகிதம் உள்ள மாநிலம் தமிழகம் - தமிழகத்தில் தான் வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளது. அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு தெரிவித்தார்.

திருச்சி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாம் திருச்சி டி.வி.எஸ் டோல் கேட் அருகே உள்ள தனியார் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

இதில் 150க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இந்த முகாமில் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த 18 முதல் 35 வயது உள்ள இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் கலந்து கொண்டு தேர்வு பெற்ற பணி நாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு ஆகியோர் வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் பெரம்பலூர் நாடாளு மன்ற உறுப்பினர் அருண் நேரு பேசுகையில்,

மாணவர் பருவத்தில் இருந்து மிகவும் பொறுப்பான இடத்திற்கு செல்கிறீர்கள்.

ஆட்கள் வேலைக்கு தேவை என தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் பார்த்து இருப்பீர்கள் ஆனால் வட இந்தியாவில் இது போன்ற அறிவிப்பு காண முடியாது

தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளது 10,000 பேருக்கான வேலைகள் உள்ளது ஆனால் 2000 பேர் தான் வேலைக்கு வருகிறார்கள்

எனவே வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளது ஆனால் ஆட்கள் குறைவாக உள்ளனர்

இந்திய அளவில் பெண்கள் வேலைக்குச் செல்வது 18 சதவீதம் ஆனால் தமிழகத்தில் 54 சதவீதம் பேர் வேலைக்கு செல்கின்றனர்.

வேலைக்கு செல்லும் பெண்கள் சதவீதம் இந்தியாவிலே தமிழகத்தில் தான் அதிகம் தமிழகத்தில் வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளது அனைவரும் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

வேலை என்பது நமது தொடக்கம் எனவே சம்பளம், தொலை தூரம் என கூறாமல் வேலைக்கு செல்ல வேண்டும் இது உங்களுக்கு அனுபவத்தை தரும் இந்த அனுபவம் வேறு ஒரு நிறுவனத்திற்கு செல்ல உதவும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் வேலை வாய்ப்பு துறை மண்டல இணை இயக்குனர் தேவேந்திரன், வருவாய் கோட்டாட்சியர் அருள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மாசில் ஆஷா உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; திருப்பதி லட்டு விவகாரத்தில், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, " நான்கு சுவற்றுக்குள் பைபிள் படிப்பதால் திருப்பதி கோவிலுக்கு வரவில்லை" என்று ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகனை விமர்சனம் செய்திருக்கிறாரே?

**பட்டணம் :** **ஆமாமய்யா; சந்திரபாபு நாயுடு செய்திருப்பது மத ரீதியிலான விமர்சனம். தற்போது சேர்ந்திருக்கும் இடம் அவரை அப்படிப் பேச வைக்கிறது. பா.ஜ.க.வுடனான பழக்க தோஷம் !**

**இன்றைய சந்திரபாபுவைப் பார்க்கும்போது, "எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்" என்ற நடிகர் விவேக்கின் நகைச்சுவைதான் நினைவுக்கு வருகிறது !**

---

உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராகப் பதவியேற்பு!

# கோவை காந்திபுரத்தில் கழகத்தினர் இனிப்பு வழங்கல்!

## தமிழ்ச்செல்வன் தலைமையில் உற்சாகம்!

கோவை, அக். 01 –

கோவை காந்திபுரத்தில் தி.மு.க. தொழிலாளர் அணி மாநில துணைச்செயலாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் திமுகவினர் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக பதவியேற்றதை அடுத்து, தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.வினர் இனிப்புகள் வழங்கி கொண்டாடி வருகின்றனர்.

இதேபோல், கோவை காந்திபுரத்தில், தி.மு.க. தொழிலாளர் அணி மாநில துணைச் செயலாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் தி.மு.க.வினர் தந்தை பெரியார் திருவுருவச் சிலை மற்றும் பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், பட்டாசு வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக பதவியேற்றது மகிழ்ச்சியை அளிப்பதாகவும், அவர் மக்களுக்கு இன்னும் சிறப்பான பணிகளை செய்வார் என மகிழ்ச்சியுடன் பேட்டியின்போது தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில், பகுதிக் கழகச் செயலாளர் சேதுராமன், முன்னாள் மாநில மாணவரணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் கணேஷ்குமார், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் டெம்போ சிவா,

தொழிற்சங்க துணைத் தலைவர் சுப்பிரமணி, மாவட்டப் பொருளாளர் கண்ணன், சோமு ஆட்டோ சங்கத் தலைவர் பூபதி, ஜி.ஜி. மூர்த்தி, கருப்புசாமி, தொண்டரணி துணை அமைப்பாளர் கணேசன், சீனிவாசன், மூத்த முன்னோடி ராமமூர்த்தி, காந்திபுரம் மணி, சரவணன், முரளி, பன்னீர் செல்வம், அப்பு என்ற மோகன், சா.கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

# ஓடி ஓடி உழைத்து - வெற்றியின் உச்சத்தைத் தொடுவார் உதயநிதி



இதமான பேச்சாலும் இளைய புன்னகையாலும்
எல்லோரையும் ஈர்க்கின்ற மாண்பாளர்...!
"உதயநிதி" என்னும் உயர்குணப் பண்பாளர்! இன்று
உற்ற துணை முதல்வராய் ஆகி உள்ளார்!

இளைஞர் நலம், விளையாட்டுத் துறைகளில் சாதனைகள்
எல்லோரும் வியக்கவே நிகழ்த்தியவர்...!
களைகட்டித் தமிழ்நாடு விளங்கும் வகையிலே
களப்பணி ஆற்றியே செயல்படுவார்!

ஒவ்வொரு பணியிலும் திட்டமிடல் இருந்தால்
உயர்நிலை எய்துவது நிச்சயம்! அதனைச்
செவ்வனே செய்திடத் தமிழ்நாடு செழித்திட - நம்
சீர்மிகு முதல்வரின் சிறப்பான தேர்வு...!

ஏற்றுள்ள துறைகள் அனைத்தும் இங்கே
ஏற்றம் பெறுவது நிச்சயம்! எல்லோரும்
போற்றிடும் வகையிலே தமிழ்நாட்டை உருவாக்கி
புகழ்பெற வைப்பதே தளபதி இலட்சியம்!

விமர்சனங்கள் எத்தனை வந்தாலும் அதற்கு
விடைகாண்பேன் என்பது உதயநிதி பண்பு!
தமிழ்நாடு ஒளிர்வதற்கு தகுதியானவர் - என்பதே
தரணியெங்கும் இப்போது பேச்சு... பேச்சு...!

கவிஞர்
**இரவி பாரதி**

